கொண்டிருக்கும்போது எந்த அறிவிப்பையும் அரசு செய்ய முடியாது. அது தங்களுக்கும் தெரியும். ஆகவே, அந்த வழக்கு நடைபெற்று முடிந்தபிறகுதான், அதற்கு ஒரு தீர்வு காணப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

(இ) தக்காளி, சிறு வெங்காயம் போன்ற காய்கறிகளை கூட்டுறவு மற்றும் பண்ணை பசுமை அங்காடிகள்மூலம் மலிவு விலையில் விற்பனை செய்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.

திரு. மு.க. ஸ்டாலின்: அடுத்து, விலைவாசியைப் பற்றிய ஒரேயொரு குறிப்பு. இன்றைக்கு, தக்காளி ஒரு கிலோ 100 ரூபாய்க்குமேல் விற்கக்கூடிய நிலை உள்ளது. சிறு வெங்காயம் ஒரு கிலோ 100 ரூபாய்க்குமேல் விற்றுக் கொண்டிருக்கிறது. எனவே, ஏழை, எளிய மக்கள் இதனால் மிகவும் சிரமத்திற்கு ஆளாகியிருக்கிறார்கள். எனவே, இதனை அரசே கொள்முதல் செய்து, கூட்டுறவு அங்காடிகள் மூலமாகவும், பசுமை அங்காடிகள் மூலமாகவும் குறைவான விலையில், ஏழை, எளிய மக்கள் பயன்பெறக்கூடிய வகையில், அதனை விற்பனை செய்வதற்கு அரசு முன்வருமா என்று நான் கேட்டு அமைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: விலைவாசி உயர்வு குறித்து மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கேட்டிருக்கிறார்கள். மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர், மாண்புமிகு உணவு அமைச்சர், உங்களில் யார் பதில் சொல்லப்போகிறீர்கள்? (குறுக்கீடு) சரி, சொல்லுங்கள்.

***மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், கூட்டுறவுக் கடைகள்மூலம் வழங்கவேண்டும் என்றுதான் கேட்டார். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் கூட்டுறவு கடைகள்மூலம் வழங்கவேண்டுமென்றுதான் கேட்டார். (குறுக்கீடு) நான் சொல்கிறேன், இருங்கள். கூட்டுறவுக் கடைகள்மூலம் வழங்க வேண்டுமென்றுதான் மாண்புமிகு

2017 ஜூலை 13] [பேரவைத் தலைவர்]

எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கேட்டார்கள். அதனால், மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சரே பதில் சொல்கிறார். சொல்லட்டும்.

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் தற்போது. . .* (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு அமைச்சர் ஒரு நிமிடம் இருங்கள். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் முக்கியமான பிரச்சினைகள் குறித்து கேட்டு, நான் ஒவ்வொன்றுக்கும், முதலமைச்சர், அமைச்சர்களிடம் பதில் வாங்கிக் கொடுத்துக்கொண்டிருக்கிறேன். அதே கட்சியில் எல்லோரும் பேசுவதற்கு வாய்ப்பு கேட்டால், நான் எப்படி சபை நடத்துவது?* (குறுக்கீடு) *நாட்டுக்கு எல்லாமே முக்கியமான பிரச்சினைதான்.* (குறுக்கீடு) *எதுதான் முக்கியமான பிரச்சினை இல்லை? திரு. ஜெ. அன்பழகனுக்கு முக்கியமாக இருக்கிற பிரச்சினை, எனக்கு முக்கியமாகத் தெரியாது. ஆனால், மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கேட்பதற்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டியதுதான் என்னுடைய கடமை. அதைச் செய்துகொண்டிருக்கிறேன். அதைச் செய்யவேண்டாம் என்கிறீர்களா?* (குறுக்கீடு) *நான் உங்களைக் கூப்பிட வேண்டியதிருந்தால், கூப்பிடுகிறேன்.* (குறுக்கீடு) *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் தற்போது இருக்கின்ற வெங்காய விலை மற்றும் தக்காளி விலைப் பற்றிச் சொன்னார்கள். குறிப்பாக, வறட்சி போன்ற சூழ்நிலை ஏற்பட்டதால், காய்கறிகளின் வரத்து குறைந்துவிட்டது. சிறு வெங்காயத்தின் விலைதான் இப்போது கூடியிருக்கிறது. பண்ணைப் பசுமை நுகர்வோர் கடைகளில் நேற்றையதினம் விலை ஒரு கிலோ சிறு வெங்காயம் 40 ரூபாய், வெளிச் சந்தையில் 50 ரூபாய்க்கு விற்கிறது; பண்ணைப் பசுமை நுகர்வோர் கடைகளில் 10 ரூபாய் குறைவாக விற்கப்படுகிறது. இதுபோன்ற சூழ்நிலையில் மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு கவனமாக உரிய நடவடிக்கை எடுக்கிறது.*

மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் அரசே கொள்முதல் செய்து விற்பனை செய்ய வேண்டுமென்று

கேட்டார். இதுபோன்ற விலையேற்ற காலங்களில், தக்காளி மற்றும் அத்தியாவசியப் பொருட்களின் விலை கூடினாலும், அந்தப் பொருட்கள் மக்களுக்குக் குறைந்த விலையில் கிடைக்க வேண்டும் என்பதற்காகத்தான், மாண்புமிகு அம்மா அவர்கள் 100 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்து 'விலை நிலைப்படுத்தும் நிதியம்' என்ற நிதியத்தை உருவாக்கினார்கள். அந்த அடிப்படையில்தான் ஒவ்வொரு காலக்கட்டத்திலும் இதுபோன்ற நடவடிக்கை எடுக்கப்பட்டு வந்திருக்கிறது. கடந்த காலத்திலும்கூட பெரிய வெங்காயத்தின் விலை கூடியது. அப்பொழுதுகூட மாண்புமிகு அம்மா அவர்கள் 22 மெட்ரிக் டன் அளவிலான வெங்காயத்தை மகாராஷ்டிரா, கர்நாடகா போன்ற மாநிலங்களிலிருந்து இறக்குமதி செய்து, இங்கே நியாய விலைக் கடைகள் மூலமாகவும், மற்ற கடைகள் மூலமாகவும் கொடுத்து, குறைவான விலைக்கு விற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. அதுபோன்ற நடவடிக்கையை மாண்புமிகு அம்மா அவர்கள் அரசை வழிநடத்துகிற மாண்புமிகு அண்ணன் எடப்பாடியார் தலைமையில் செயல்படும் இந்த அரசானது முனைப்போடு இன்றைக்கு எடுத்திருக்கிறது. அதற்கான நடவடிக்கை துறை ரீதியாக எடுக்கப்பட்டிருக்கிறது, உறுதியாக இந்த விலையேற்றம் மக்கள் மத்தியில் பாதிப்பு இல்லாத வகையில் சரிசெய்யப்படும். அதுமட்டுமல்ல; இன்றைக்கு விவசாயிகளுக்கு பயிர்க் கடன்கள் வழங்குவதுபோல், காய்கறிகள், பழங்கள் தங்குதடையின்றி ஆண்டு முழுவதும் கிடைப்பதற்கு, அவர்களுக்குக் கடன் வழங்குவதற்கு மாண்புமிகு அம்மா அவர்கள் அரசானது வழிவகை செய்திருக்கிறது.

முற்பகல் 11–30

எனவே, அந்த அடிப்படையில் 31–5–2014 வரை ரூபாய் 34.70 கோடி வட்டியில்லா கடனாகவும், ரூபாய் 22.42 கோடி மானியமாகவும், ஆக கூடுதலாக, ரூபாய் 56.49 கோடி இதுவரை வழங்கப்பட்டுள்ளது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(ஈ) சேலம், துண்டுப் பிரசுரம் விநியோகித்த இரண்டு பெண்கள் கைது–ரிமாண்ட் செய்யாதது

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜெ. அன்பழகன், என்னவென்று சொல்லுங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர், ஒரு நிமிடம் நீங்கள் உட்காருங்கள். உங்கள் quota–வை திரு. ஜெ. அன்பழகன்